**சிறப்பு அமர்வு நீதிமன்றம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமை தடுப்பு சட்டம், வேலூர். வேலூர் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.G.ராதாகிருஷ்ணன்,**

அமர்வு நீதிபதி, வேலூர்.
(JO CODE TN 01821)

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாள், வியாழக்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.68 / 2020**

(CNR.No.TNVL29-000135-2020)

| | |
|---|---|
| **தீர்ப்புக்கு ஒத்தி வைக்கப்பட்ட நாள்:** 08.07.2025 | **தீர்ப்பளிக்கப்பட்ட நாள்:** 10.07.2025 |

| | | |
|---|---|---|
| 1. | குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>வேலூர் தாலுக்கா காவல் நிலையம்.<br>குற்ற எண்.240/2016 |
| 2. | எதிரி (கள்) | *1. ராஜேஷ் த/பெ.மைகேசன் (இறந்துவிட்டார் அதனால் குற்றச்சாட்டு அற்றுவிட்டது தேதி 23.01.2025)*<br>*2. மைகேசன் த/பெ.கிருஷ்ண கவுண்டர்*<br>*3. தஞ்சியம்மாள் க/பெ.மைகேசன்*<br>*4. சிவசங்கரி த/பெ.மைகேசன்* |
| 3. | முறையிடப்பட்ட குற்றம் | பிரிவுகள்.294 (b), 323, 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va), 3 (1) (a), 341, 326 மற்றும் 34 தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம். |

| | | |
|---|---|---|
| 4. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | Sec 341 Sec r/w 3 (2) (va), Sec 3 (1) (s), 294 (b) of I.P.C, Sec 326 of I.P.C. r/w 3 (2) (va) SC/ST (PoA) Act r/w 34 of I.P.C, Sec 323 of I.P.C. r/w 3 (2) (va) SC/ST (PoA) Act r/w 34 of I.P.C. |
| 5. | எதிரிகளின் பதில் | குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டது. |
| 6. | நீதிமன்றத்தின் தீர்மானம் | எதிரிகள் குற்றவாளிகள் இல்லை. |
| 7. | தீர்ப்பும் தண்டனையும் | இந்த வழக்கின் 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்ற காரணத்தினால் 2 முதல் 4 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235 (1) படிக்கும் பிரிவு 258 B.N.S.S. படிக்கும் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்தும் அவர்களை மேற்படி குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1ம் எதிரி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டதால் அவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டு அற்றுபோய் விட்டதாக ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. 3 மற்றும் 4 எதிரிகள் Crl.M.P.No.1716/2019 கடந்த 02.04.2019 தேதியிட்டு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி கு.வி.மு.ச. பிரிவு 88 படிக்கு பிணைப் பத்திரங்கள் எழுதி கொடுக்க உத்தரவிட்டதன் பேரில் பிணைப் பத்திரங்கள் எழுதிக் கொடுத்துள்ளார்கள். 1 மற்றும் 2ம் எதிரிகள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் 2 முதல் 4 எதிரிகள் |

| | | |
|---|---|---|
| | | எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை ரத்து செய்யவும் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>இந்த வழக்கில் வழக்கு சொத்து ஆவணமான சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட மரக்கொம்பை இவ்வழக்கில் மேல் முறையீட்டு காலம் முடிந்த பிறகு கு.வி.மு.ச. பிரிவு 262 ன் படி அழிக்க உத்தரவிடப்படுகிறது. |
| 8. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.S.பாண்டியன் |
| 9. | எதிரி (கள்) தரப்பு வழக்கறிஞர் | திரு.R.ஜெயசங்கர் (எதிரிகள் 2, 3, 4) |
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | A1–19.12.2016 (charge abated)<br>A2–19.12.2016<br>A3 & A4– 02.04.2019 |
| 11. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1–19.12.2016 (charge abated)<br>A2–19.12.2016<br>A3 & A4– 02.04.2019 (Bond U/s.88 of Cr.P.C. executed) |
| 12. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 19.12.2018 |
| 13. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 03.09.2019 |
| 13. | அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை தொடங்கப்பட்ட நாள் | 17.02.2021 |
| 14. | அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்து முடிக்கப்பட்ட நாள் | 12.07.2023 |

| | | |
|---|---|---|
| 15. | கு.வி.மு.ச.பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள். | 13.02.2025 |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண்.68/2022 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 08.07.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுதரப்பில், அரசு வழக்கறிஞர் திரு.S.பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது, 2, 3 மற்றும் 4ம் எதிரிகளுக்காக திரு.R.ஜெயசங்கர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

## <u>தீர்ப்புரை</u>

1. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**:–

*1.1.* இவ்வழக்கின் புகார்தாரரான பூபாலன் என்பவர் கடந்த 15.11.2016ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் அவரின் மனைவி பரிமளா அவரை கைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரிடம் ராஜேஷ், மைகேசன், அவரின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் அவரை அடித்ததாக கூறியதாகவும் அதற்கு புகார்தாரர் ஏன் அடித்தார்கள் என்று கேட்டதற்கு அவரின் மனைவி அவரிடம் மாடு அவர்களின் நிலத்தில் போய்விட்டதால் ராஜேஷ் டேய் செக்கிலி தெவிடியா மாடு இங்கு வந்து மேயுது அங்க எவனடி ஓக்கர என கேட்டான் என கூறியதாகவும் அதன் பிறகு புகார்தாரர் தனது பிள்ளைகளுடன் வீட்டிற்கு சென்றதாகவும்

அதன் பிறகு சுமார் 8 3/4 மணியளவில் ராஜேஷ் வண்டியில் வந்து அவரின் மனைவியை டேய் செக்கிலி பொரம்போக்கில் வீடு கட்டினு வாழ்ற என்று திட்டியதாகவும் அதற்கு அவர் வெளியே வந்து டேய் உங்க மாடும் மேய்ந்து இருக்குடா என்று சொன்னதாகவும் அதற்கு மீண்டும் டேய் செக்கிலி முண்டம் மாடுதாண்டா வந்து மேய்ந்தது என திட்டி கொம்பால் தலை, இடது கை, சுண்டு விரல், வலது முழங்கை, கட்டை விரல், இடது காலில் அடித்ததாகவும் மைகேசன் பொரம்போக்கில் வீடு கட்டி பொரம்போக்கு பொழப்பு பன்ற தெவிடியா பையா என திட்டியதாகவும் உன் சாதிகாரன் எல்லாம் அங்க இருக்க ஒரு செக்கிலி மட்டும் இங்க வந்துட்டியா என்று திட்டியதாகவும் பின்னர் அவர் தனது மனைவி மற்றும் மகனுடன் மருத்துவமனைக்கு செல்லும்போது வழி மடக்கிய ராஜேஷ் புகார்தாரரையும் அவரின் மனைவி மற்றும் மகனையும் கட்டையால் தாக்கியதாகவும் கடந்த 15.11.2016 ம் தேதி அ.த.சா.14 திரு.சி.முரளிதரன் உதவி ஆய்வாளர் அவர்கள் வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் கடந்த 16.11.2016 அன்று காலை சுமார் 2.00 மணியளவில் காவல் நிலைய குற்ற எண் 514/2016 பிரிவுகள் 294 (b), 323 of I.P.C. r/w 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va) of SC/ST Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார்.

*1.2.* அ.சா.15 ஆரோக்கியம் வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 16.11.2016 தேதியிட்ட வேலூர் மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின்படி இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் மற்றும்

கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றை தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்துள்ளார். கடந்த 17.11.2017 அன்று இவ்வழக்கின் வாதி மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்று கேட்டு வேலூர் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி சாதி சான்றிதழ் பெற்றுள்ளார். அதன் பின்பு கடந்த 20.12.2016 அன்று வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர்கள் ராஜி, எழிலரசி ஆகியோரை விசாரித்து மருத்துவ சான்றிதழ் பெற்று அவர்களை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்துள்ளார். கடந்த 27.12.2016 அன்று வழக்கின் வாதி மற்றும் எதிரிக்கு சாதி சான்றிதழ் வழங்கிய வேலூர் வட்டாட்சியர் மற்றும் தலைமையிடத்து வட்டாட்சியர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு கடந்த 18.03.2017 அன்று இவ்வழக்கின் விசாரணையை முடித்து அரசு சிறப்பு வழக்குரைஞரின் கருத்துரை பெற்று எதிரிகள் மீது சட்டப்பிரிவு 294 (b), 323, 326, 341 of I.P.C. r/w 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va), 3 (1) (a) of SC/ST Act ன்படி 19.12.2018 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

*1.3.* வழக்கு கோப்புகளையும், ஆவணங்களையும் ஆய்வு செய்து இந்த வழக்கை மாவட்ட முதன்மை நீதிமன்றம் Spl.S.C.No.65/2018 என கோப்புக்கு எடுத்துள்ளது. அதன்பிறகு இந்நீதிமன்றம் 2020ம் ஆண்டில் திறக்கப்பட்டதும் வழக்கு இந்நீதிமன்றத்தில் 24.09.2020 அன்று Spl.S.C.No.68/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

2. மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் இருந்து எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில் 22.07.2019 அன்று கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3. பிறகு இருதரப்பு வாதங்களைக் கேட்ட பின்னரும், கோப்புகளை ஆராய்ந்த பின்னரும் எதிரி மீதான குற்றங்கள் குறித்து முதல்நோக்கு வழக்கு இருப்பதாக திருப்தி அடைந்த நிலையில், 03.09.2019 அன்று எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு Sec 341 Sec r/w 3 (2) (va), Sec 3 (1) (s), 294 (b) of I.P.C, Sec 326 of I.P.C. r/w 3 (2) (va) SC/ST (PoA) Act r/w 34 of I.P.C, Sec 323 of I.P.C. r/w 3 (2) (va) SC/ST (PoA) Act r/w 34 of I.P.C. குற்றசாட்டுகள் வனைந்து தமிழில் படித்துக் காட்டி விளக்கி வினவிய போது எதிரிகள் தான் குற்றவாளி இல்லை என எடுத்துரைத்தார்கள். எனவே இவ்வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் அரசு தரப்பில் 15 சாட்சிகள் பட்டியலில் காட்டப்பட்டு 15 சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.15 ஆக விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.20 வரையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சான்று பொருள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

புகார்தாரரான அ.த.சா.1 இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி ஒரு மனுவைக் கொடுத்து 2009 ம் வருடத்தில் 2 ம் எதிரி காவல் நிலையத்தில்

எழுதிக் கொடுத்த கடிதத்தின் நகலைக் கொடுத்து பரிசீலனை செய்யக் கோரினார். அந்த கடிதம் இந்த வழக்கிற்கு தேவையற்றது.

**<u>5. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் இருந்து புலனாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:–</u>**

*5.1.* இவ்வழக்கின் புகார்தாரரான ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த திரு.பூபாலன் என்பவர் கடந்த 15.11.2016 ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் அவரின் மனைவி பரிமளா அவரை கைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரிடம் ராஜேஷ், மைகேசன், அவரின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் அவரை அடித்ததாக கூறியதாகவும் அதற்கு புகார்தாரர் ஏன் அடித்தார்கள் என்று கேட்டதற்கு அவரின் மனைவி அவரிடம் மாடு அவர்களின் நிலத்தில் போய்விட்டதால் ராஜேஷ் டேய் செக்கிலி தெவிடியா மாடு இங்கு வந்து மேயுது அங்க எவனடி ஓக்கர என கேட்டான் என கூறியதாகவும் அதன் பிறகு புகார்தாரர் தனது பிள்ளைகளுடன் வீட்டிற்கு சென்றதாகவும் அதன் பிறகு சுமார் 8 3/4 மணியளவில் ராஜேஷ் வண்டியில் வந்து அவரின் மனைவியை டேய் செக்கிலி பொறம்போக்கில் வீடு கட்டினு வாழ்ற என்று திட்டியதாகவும் அதற்கு அவர் வெளியே வந்து டேய் உங்க மாடும் மேய்ந்து இருக்குடா என்று சொன்னதாகவும் அதற்கு மீண்டும் டேய் செக்கிலி முண்டம் மாடுதாண்டா வந்து மேய்ந்தது என திட்டி கொம்பால் தலை, இடது கை, சுண்டு விரல், வலது முழங்கை, கட்டை விரல், இடது காலில் அடித்ததாகவும் மைகேசன் பொரம்போக்கில் வீடு கட்டி பொரம்போக்கு பொழப்பு பன்ற தெவிடியா பையா என திட்டியதாகவும் உன் சாதிகாரன்

எல்லாம் அங்க இருக்க ஒரு செக்கிலி மட்டும் இங்க வந்துட்டியா என்று திட்டியதாகவும் பின்னர் அவர் தனது மனைவி மற்றும் மகனுடன் மருத்துவமனைக்கு செல்லும்போது வழி மடக்கிய ராஜேஷ் புகார்தாரரையும் அவரின் மனைவி மற்றும் மகனையும் கட்டையால் தாக்கியதாகவும் கடந்த 15.11.2016 ம் தேதி அ.த.சா.14 திரு.சி.முரளிதரன் உதவி ஆய்வாளர் அவர்கள் வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் கடந்த 16.11.2016 அன்று காலை சுமார் 2.00 மணியளவில் காவல் நிலைய குற்ற எண் 514/2016 பிரிவுகள் 294 (b), 323 of I.P.C. r/w 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va) of SC/ST Act ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார்.

*5.2.* அ.சா.15 ஆரோக்கியம் வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 16.11.2016 தேதியிட்ட வேலூர் மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின்படி இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றை தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்துள்ளார். கடந்த 17.11.2017 அன்று இவ்வழக்கின் வாதி மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்று கேட்டு வேலூர் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி சாதி சான்றிதழ் பெற்றுள்ளார். அதன் பின்பு கடந்த 20.12.2016 அன்று வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர்கள் ராஜி, எழிலரசி ஆகியோரை விசாரித்து மருத்துவ சான்றிதழ் பெற்று அவர்களை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்துள்ளார். கடந்த 27.12.2016

அன்று வழக்கின் வாதி மற்றும் எதிரிக்கு சாதி சான்றிதழ் வழங்கிய வேலூர் வட்டாட்சியர் மற்றும் தலைமையிடத்து வட்டாட்சியர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு கடந்த 18.03.2017 அன்று இவ்வழக்கின் விசாரணையை முடித்து அரசு சிறப்பு வழக்குரைஞரின் கருத்துரை பெற்று எதிரிகள் மீது சட்டப்பிரிவு 294 (b), 323, 326, 341 of I.P.C. r/w 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va), 3 (1) (a) of SC/ST Act ன்படி 19.12.2018 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>6. அ.த.சா.1 பூபாலன் (புகார்தாரர்)</u>:-

இவ்வழக்கில் அ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் பூபாலன் தான் இந்து, அருந்ததியர் வகுப்பை சார்ந்தவர் என்றும் கடந்த 15.11.2016 அன்று அவரின் மனைவி பரிமளா அவருக்கு போன் செய்து மைக்சேன் நிலத்தில் மாடு மேய்வதாக கூறினார் என்றும் மாட்டை ஓட்டி வருவதற்காக அவரின் மனைவி பரிமளா மகாதேவன் நிலத்தின் வழியாக சென்றார் என்றும் அவ்வாறு சென்றபோது மைக்கேசன் மகன் ராஜேஷ் என்பவர் அவரின் மனைவியைப் பார்த்து செக்கிலி தேவிடியா உங்க மாடு எங்க நிலத்துல மேயுது, நீ அங்க எவனடி ஓக்கர என்று அசிங்கமாகவும் அருவருப்பாகவும் திட்டினார் என்றும் அவ்வாறு திட்டிக்கொண்டு இருந்தபோது ராஜேஷின் அம்மா மற்றும் ராஜேஷின் அக்காவோ அல்லது தங்கையோ யார் என்று தெரியாது, அவர்களும் சேர்ந்து எனது மனைவியை அடித்தார்கள் என்றும் எனவே அவரின் மனைவி அவருக்கு போன் செய்தார் என்றும் பிறகு சுமார் 8.30 மணியளவில் ராஜேஷ் மறுபடியும் அவர்களின் வீட்டிற்கு சென்று அவர்களைப் பார்த்து

ஏய் செக்கிலி நாய்களே, ஏய் பொறம்போக்குல வீடு கட்டினு வாழ தெரியுது, மாட்டை பிரித்து வைக்க தெரியலையா என்று அசிங்கமாக பேசியதாகவும் அதனால் அவர்கள் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் பின்னர் தரையில் இருந்த கொம்பை எடுத்து ராஜேஷ் என்பவர் அவரது தலை, இடது சுண்டு விரல் வலது முழங்கை மற்றும் கால் ஆகிய இடங்களில் அடித்தார் என்றும் அவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ராஜேஷ் என்பவர் அவரையும் அவரின் மனைவியையும், இரண்டு பெண்களையும் அடித்தார் என்றும் பிறகு மருத்துவமனைக்கு அவர்களுடன் மைக்கேசன் மற்றும் ராஜேஷ் ஆகியோரும் வந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>7. அ.த.சா.2 நா.முருகன்</u>:-**

இவ்வழக்கில் அ.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட நா.முருகன் சம்பவம் நடந்த சமயத்தில் அவர் சம்பவ இடத்தில் இல்லை என்றும் 3 நாட்கள் கழித்து அவர் வேலைக்கு வந்தபோது சண்டை நடந்ததாக கேள்விபட்டதாகவும் சம்பவத்தை அவர் நேரில் பார்க்கவில்லை என்றும் புகார்தாரர் மற்றும் புகார்தாரர் குடும்பம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**<u>8. அ.த.சா.3 சு.கோவிந்தராஜ்</u>:-**

இவ்வழக்கில் அ.த.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட சு.கோவிந்தராஜ் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் புகார்தாரர் பூபாலனையும் தெரியும் என்றும் அவர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசு

தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**9. <u>அ.த.சா.4 பூ.பரிமளா</u>:–**

இவ்வழக்கில் அ.த.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட பூ.பரிமளா தனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் கடந்த 15.11.2016 அன்று மைக்கேசன் என்பவர் அவரின் வீட்டிற்கு வந்து அவர்கள் நிலத்தில் இவரின் மாடு இறங்கிவிட்டதாக கூறி அழைத்து சென்றதாகவும் மகாதேவன் நிலத்தின் வழியாக சென்று கொண்டிருக்கும்போது ராஜேஷ் என்பவர் செக்கிலி தேவிடியா உங்க மாட்டை விட்டுவிட்டு நீ அங்க எவனடி ஓக்கர என்று அசிங்கமாக கூறியதாகவும் எதிரிகள் தஞ்சியம்மாள் மற்றும் சிவசங்கரி ஆகியோர் அவரை கன்னத்தில் மற்றும் முதுகில் அடித்தார்கள் என்றும் அவரின் கணவருக்கு போன் செய்து மைக்கேசன் என்பவர் மகாதேவன் நிலத்தில் வைத்து அவரை அடித்தது பற்றி கூறியதாகவும் அப்போது ராஜேஷ் என்பவர் அவரின் வீட்டருகே வந்து அவரின் கணவர் பேசிக்கொண்டிருக்கும்போதே கட்டையை எடுத்து அவரின் கணவர் தலை மேல் அடித்தார் என்றும் அவரின் கணவரின் தலை, இடது சுண்டு விரல், வலது முழங்கை மற்றும் கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் மைக்கேசன் மற்றும் ராஜேஷ் என்பவர்கள் வழிமடக்கி அவரின் தாலி கயிறை பிடித்து எறிந்து விட்டார்கள் என்றும் எதிரிகள் அடிக்கடி அவர்களிடம் பிரச்சினை செய்வார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10. <u>அ.த.சா.5 பூ.ஓவின் குமார்</u>:–**

இவ்வழக்கில் அ.த.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட பூ.ஓவின் குமார் ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும் அவரும் அவரின் அக்கா காயத்தி மற்றும் சங்கமித்திரா ஆகியோர் கணியம்பாடியில் டியூஷன் முடிந்து அவர்களை அழைத்து செல்ல அவர்களின் அவரின் அப்பா அங்கு சென்றபோது கடந்த 15.11.2016 அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் அவரின் அம்மா, அவரின் அப்பாவிற்கு போன் செய்து மகாதேவன் நிலத்தின் வழியில் மாடு மேய்ந்து கொண்டிருந்தது என்றும் மைக்கேசன் என்பவர் இந்த நிலத்தாண்ட ஏன் மாடு மேய்க்கிறாய் என்று கேட்டார் என்றும் பிறகு தஞ்சியம்மாள் மற்றும் சிவசங்கரி அவரின் அம்மாவை முதுகில் அடித்ததாக சொன்னார் என்றும் பிறகு அன்று இரவு சுமார் 8.45 மணிக்கு ராஜேஷ் என்பவர் கட்டையை எடுத்துக் கொண்டு தகாத வார்த்தையால் அருவருப்பு ஊட்டும் வகையில் திட்டினார் என்றும் சாதி பெயரை சொல்லி திட்டினார் என்றும் சண்டை முடிந்து சுமார் 9.00 மணிக்கு மருத்துவமனைக்கு போகும் வழியில் மறுபடியும் வழி மறித்து ஒரு கட்டையால் இடது பக்க தலை, கை, கால், கட்டை விரல் ஆகியவற்றில் அடித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11. <u>அ.த.சா.6 பூ.சங்கமித்திரா:–</u>**

இவ்வழக்கில் அ.த.சா.6 ஆக விசாரிக்கப்பட்ட பூ.சங்கமித்திரா ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும் கடந்த 15.11.2016 அன்று கணியம்பாடியில் உள்ள டியூஷனுக்கு சென்றபோது அவரின் அப்பா அவர்களை அழைத்துவர சென்றபோது சுமார் 6.30 மணியளவில் அவரின் அம்மா அவரின் அப்பாவிற்கு போன் செய்து, நம் மாடு மைக்கேசன் கொல்லையில் மேய்ந்து கொண்டிருந்ததாக மைக்கேசன் வந்து சொல்ல நான் மாட்டை அழைத்து வர சுமார் 6 மணியளவில் மகாதேவன் நிலத்து

வழியே சென்றுகொண்டிருந்த போது அங்கு வந்த ராஜேஷ் என்பவர் ஏ செக்கிலி உன் மாடு இங்க வந்து மேயுது, மாட்டை விட்டு அங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கிற என்று கொச்சையான வார்த்தைகளை கூறி அருவருப்பு ஊட்டு வகையில் திட்டினார் என்றும் மாடு தானே மேய்ந்தது அதுக்கு ஏன் சாதி பெயரை சொல்லி திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு மைக்கேசன் மனைவி தஞ்சியம்மாள் மற்றும் சிவசங்கரியும் அங்கே வந்து தன்னை கைகளால் உடம்பில் மாறி மாறி அடித்ததாக அவரின் அம்மா அவரின் அப்பாவிற்கு போன் செய்து சொன்னார் என்றும் பின்னர் சுமார் 8.30 மணி முதல் 8.45 மணியளவில் ராஜேஷ் அவரின் வீட்டருகில் வந்து ஏ செக்கிலி புறம்போது இடத்துல வீடு கட்டி வாழ தெரியுது, மாடு ஒழுங்கா மேய்க்க தெரியலயா என்று சாதி பெயரை சொல்லி திட்டினார் என்றும் அதற்கு தான் அவரின் அப்பா உன் மாடு தான் மேய்ந்திருக்கிறது என்று கூற வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் அப்போது ராஜேஷ் கழே இந்து மரக்கொம்பை எடுத்து அவரின் அப்பாவின் தலை, இடது கை சுண்டுவிரல், இடது கால், வலது கை கட்டைவிரல், வலது முழங்கை ஆகிய இடங்களில் அடித்தார் என்றும் அப்போது மைக்கேசன் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி புறம்போக்கு பொழப்பு பொழைக்கிற, எல்லா சக்கிலியும் அங்கிருக்கிறாங்க, நீ ஒருத்தன் மட்டும் இங்க வந்துட்டியா என்று சாதி பெயரை சொல்லி திட்டினார் என்றும் சுமார் 9.00 மணியளவில் அவரின் அப்பா அவரின் அம்மாவுடன் மருத்துவமனைக்கு செல்ல ரோட்டிற்கு வந்ததாகவும் அப்போது மீண்டும் ராஜேஷ் என்பவர் வழிமடக்கு அவரின் அப்பா அம்மா, தம்பியை தாக்கி விட்டு அவர்களை தாக்கிய கொம்பை வீசி எறிந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>12. அ.த.சா.7 காயத்திரி</u>:-**

இவ்வழக்கில் அ.த.சா.7 ஆக விசாரிக்கப்பட்ட காயத்திரி தனக்கு ஆஜர் எதரிகளைத் தெரியும் என்றும் கடந்த 15.11.2016 அன்று மாலை பள்ளி முடித்துவிட்டு அதே பள்ளியில் படிக்கும் அவரின் தம்பி, தங்கையுடன் கணியம்பாடியில் உள்ள டியூஷனுக்கு சென்றார் என்றும் அன்று மாலை அவரின் அப்பா டியூஷனில் இருந்து அவர்களை அழைத்து வர வந்திருந்தார் என்றும் சுமார் 6.30 மணியளவில் அவரின் அம்மா அவரின் அப்பாவிற்கு போன் செய்து மைக்கேசன் என்பவர் நிலத்தில் நமது மாடு மேய்ந்து விட்டதாக மைக்கேசன் வீட்டிற்கு வந்து சொன்னார் என்றும் அதற்கு அவரின் அம்மா 6 மணியளவில் மகாதேவன் நிலத்து வழியே சென்று கொண்டிருந்தபோது அங்கு வந்த மைக்கேசன் மகன் ராஜேஷ் என்பவர் ஏ செக்கிலி உன் மாடு இங்கு வந்து மேயுது, மாட்டை விட்டு அங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கு என்று கொச்சையான வார்த்தைகளால் அருவருப்பு ஊட்டும் வகையில் திட்டினார் என்றும் புறம்போக்கு இடத்துல வீடு கட்டி வாழ தெரியுது, மாட்டை பிடிச்சி வைக்க தெரியலையா என்று கேட்டார் என்றும் அங்கு வந்த மைக்கேசன் மனைவி தஞ்சியம்மாள் மற்றும் அவரது மகள் சிவசங்கரி இரண்டு பேரும் அவரின் அம்மாவை கைகளால் மாறி மாறி அடித்தனர் என்றும் அவரின் அம்மா அவரின் அப்பாவிற்கு போன் மூலம் தெரிவித்தார் என்றும் அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் ராஜேஷ் என்பவர் அவரின் வீட்டிற்கு வந்து புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி வாழ தெரியுது, மாட்டை பிடிச்சி வைக்க தெரியலயா, ஏ செக்கிலி நாய்களா மாட்ட விட்டுட்டு என்ன பன்றீங்க என்று அசிங்கமாக திட்டினார் என்றும் அதற்கு அவரின் அப்பா உன் மாடுதான் மேய்ந்திருக்கிறது

என்று கூற வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் அதற்கு ராஜேஷ் என்பவர் உன் மாடுதான் என் நிலத்தில் வந்து மேய்ந்தது என்று சொல்லி கீழே இருந்த மரக்கொம்பை எடுத்து அவரின் அப்பாவின் தலை, வலது சுண்டுவிரல், வலது கால், இடது கட்டைவிரல், வலது முழங்கை ஆகிய இடங்களில் அடித்தார் என்றும் அப்போது மைக்கேசன் ஏ செக்கிலி நாய்களா உன் சாதிகாரன் எல்லாம் அங்கே இருக்கிறான், நீ ஒருத்தன் மட்டும் இங்க வந்துட்டியா என்று சாதி பெயரை சொல்லி கொச்சை வார்த்தைகளால் அருவருப்பு ஊட்டும் வகையில் அவர்களை திட்டினார் என்றும் அவர்கள் அனைவரும் அவரின் அப்பா, அம்மா, தம்பியுடன் மருத்துவமனைக்கு செல்ல ரோட்டிற்கு வந்தபோது அங்கு வந்த ரஜேஷ் அவர்களை வழிமடக்கி மரக்கொம்பால் அவரின் அப்பா, அம்மா மற்றும் அவரின் தம்பியை மாறி மாறி அடித்தார் என்றும் ராஜேஷ் என்பவர் அவர் அடித்த கட்டையை அவரே மறைத்துவிட்டு சென்றார் என்றும் அதனால் அந்த கட்டையை அவர்களால் அடையாளம் காட்ட முடியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

<u>13. அ.த.சா.8 ராமஜெயம்</u>:–

இவ்வழக்கில் அ.த.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட ராமஜெயம் ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் அவருடையதுதான் என்றும் அதில் உள்ள சங்கதிகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர் வெற்று பேப்பரில் கையொப்பம் போட்டார் என்றும் வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**<u>14. அ.த.சா.9 ரவிகுமார்</u>:-**

இவ்வழக்கில் அ.த.சா.9 ஆக விசாரிக்கப்பட்ட ரவிகுமார் ஆஜர் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அவருடையதுதான் என்றும் அதில் உள்ள சங்கதிகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து அவர் எழுதிய பேப்பரில் கையொப்பம் போட்டார் என்றும் வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**<u>15. அ.த.சா.10 மருத்துவர் எழிலரசி</u>:-**

இவ்வழக்கின் அ.த.சா.10 ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் எழிலரசி கடந்த 15.11.2016 அன்று இரவு சுமார் 9.25 மணியளவில் அவர் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவுல் பணியில் இருந்தபோது பூபாலன் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்ததாகவும் அவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர் மற்றும் 2 பெண் நபர் கடந்த 15.11.2016 அன்று இரவு 8.30 மணியவபில் நெ.171, என்.எஸ்.கே. நகர், கணியம்பாடி இல்லத்தில் கட்டையால் தாக்கியதாக கூறினார் என்றும் அவரை பரிசோதனை செய்ததில், அவர் சுய நினைவுடன் காணப்பட்டார் என்றும் அவரது நாடி துடிப்பு மற்றும் இரத்த கொதிப்பு சீராக காணப்பட்டது என்றும் அவருக்கு 10 செ.மீ அளவில் வலது முழங்கையில் கீறிய காயம் காணப்பட்டது என்றும் 3 செ.மீ அளவில் கீறிய காயம் வலது காலில் காணப்பட்டது என்றும் 0.5 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் வலது உள்ளங்கையிலும் மற்றும் வலது முழங்கையிலும் காணப்பட்டது என்றும் அவருக்கு

முதலுதவி அளித்து உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அதன் விவரங்களை விபத்து பதிவேட்டில் பதிவு செய்தார் என்றும் அவரது இடது கையில் எக்ஸ்ரே எடுத்ததில் அவரது இடது சுண்டு விரலில் எலும்பு முறிவு உள்ளதாக எலும்பு முறிவு மருத்துவர் சான்று வழங்கினார் என்றும் அதன் அடிப்படையில், அவர் பூபாலன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினார் என்றும் பின்னர் அதே நாளில் இரவு 9.30 மணியளவில் அவர் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவுல் பணியில் இருந்தபோது பரிமளா என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்ததாகவும் அவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர் மற்றும் 2 பெண் நபர் கடந்த 15.11.2016 அன்று இரவு 8.30 மணியளவில் நெ.171, என்.எஸ்.கே நகர், கணியம்மாடி இல்லத்தில் கட்டையால் தாக்கியதாக கூறினார் என்றும் அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுய நினைவுடன் காணப்பட்டார் என்றும் அவரது நாடி துடிப்பு மற்றும் இரத்த கொதிப்பு சீராக காணப்பட்டது என்றும் அவருக்கு 3x2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் இடது முழங்கையில் காணப்பட்டது என்றும் அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அதன் விவரங்களை விபத்து பதிவேட்டில் பதிவு செய்தார் என்றம் அவருக்கு தலையில் சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது என்றும் சிடி ஸ்கேன் அறிக்கையில் அவருக்கு தலையில் எவ்வித காயமும் இல்லை என தெரியவந்தது என்றும் அதன் அடிப்படையில் பரிமளா என்பவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16. அ.த.சா.11 நீ.ராஜீ (உதவி மருத்துவர்):-**

இவ்வழக்கில் அ.த.சா.11 ஆக விசாரிக்கப்பட்ட நீ.ராஜீ (உதவி மருத்துவர்) என்பவர் கடந்த 16.11.2016 அன்று மதியம் 12.50 மணியளவில் வி.ஓவின் குமார் எண் 171, என்.எஸ்.கே.நகர் மேட்டு தெரு, கணியம்பாடி என்ற நபரை உமா என்கிற அவரது பெரியம்மா சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும் அவரிடம் விசாரித்தபோது அடையாளம் தெரிந்த 4 நபர்கள் 15.11.2016 அன்று இரவு 9.30 மணியளவில் அவரது வீட்டிற்கு அருகில் இரும்பு கம்பியால் அவரை தாக்கியதாக கூறினார் என்றும் அவரை பரிசோதனை செய்தபோது முழு சுயநினைவுடன் இருந்தார் என்றம் அவரது வலது உள்ளங்கையில் 0.25 x 0.25 cm அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது என்றும் வலது பக்க தோள்பட்டையில் வலி இருப்பதாக கூறினார் என்றும் அவருக்கு உள்நோயாளியாக சிகிச்சை எடுக்க விரும்பம் இல்லாததால் புறநோயாளியாக சிகிச்சையளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17. அ.த.சா.12 மு.பழனி (வட்டாட்சியர்):-**

இவ்வழக்கில் அ.த.சா.12 ஆக விசாரிக்கப்பட்ட மு.பழனி கடந்த 2016 – 2017 ம் ஆண்டுகளில் வேலூர் வட்ட வட்டாட்சியராக பணிபுரிந்தபோது வேலூர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கடிதம் மூலம் சாட்சிகளின் சாதி சான்றிதழ்கள் வழங்க கோரியதன் பேரில் முறையான சார்நிலை அலுவலர் அவர்களின் எழுத்து பூர்வமான பரிந்துரைகளைப் பெற்று சாட்சிகள் பூபாலன், பரிமளா, ஓவின்குமார் ஆகியோர் இந்து அருந்ததியர் வகுப்பை சார்ந்தவர்கள் என சான்றிதழ்

வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**18. அ.த.சா.13 மு.மோகன் (துணை வட்டாட்சியர்):-**

இவ்வழக்கில் அ.த.சா.13 ஆக விசாரிக்கப்பட்ட மு.மோகன் என்பவர் கடந்த 2016ம் ஆண்டு வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்தபோது இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளின் சாதி சான்றிதழ் கேட்டு வேலூர் உட்கோட்ட காவல் துஜண கண்காணிப்பாளர் அவர்கள் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என்றும் அந்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் எதிரிகள் இந்து வன்னியர் வகுப்பை சார்ந்தவர்கள் என சான்றிதழ் வழங்கினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**19. அ.த.சா.14 சி.முரளிதரன் (உதவி ஆய்வாளர்):-**

இவ்வழக்கில் அ.த.சா.14 ஆக விசாரிக்கப்பட்ட திரு.சி.முரளிதரன் அவர்கள் கடந்த 15.11.2016 அன்று இரவு 11.00 மணியளவில் பூபாலன் என்வரை விசாரணை செய்து அவருடைய வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் பின்னர் கடந்த 16.11.2016 அன்று காலை 2.00 மணியளவில் காவல் நிலைய குற்ற எண் 514/2016 பிரிவுகள் 294 (b), 323 of I.P.C. r/w 3 (2) (r), 3 (1) (s), 3 (2) (va) of SC/ST Act ன் படி வழக்கு பதிவு செய்தார் என்றும் இவ்வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக காவல் கண்காணிப்பாளர் அவர்களின் பார்வைக்கு சமப்பித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>20. அ.த.சா.15 திரு.சு.ஆரோக்கியம் (காவல் துணை கண்காணிப்பாளர்):-</u>**

இவ்வழக்கில் அ.த.சா.15 ஆக விசாரிக்கப்பட்ட திரு.சு.ஆரோக்கியம் அவர்கள் கடந்த 16.11.2016 அன்று வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றியபோது இவ்வழக்கினை வேலூர் மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின்படி புலன் விசாரணைக்கு எடுத்துக்ககொண்டதாகவும் அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றை தயார் செய்ததாகவும் பிறகு அன்றே சாட்சகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்ததாகவும் கடந்த 17.11.2017 அன்று இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட வாதி மற்றும் எதிரிக்கு சாதி சான்று கேட்டு வேலூர் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பியதாகவும் அதன் பின்பு கடந்த 20.12.2016 அன்று வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர்கள் ராஜி, எழிலரசி ஆகியோரை விசாரித்து மருத்துவ சான்றிதழ் பெற்று அவர்களை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்ததாகவும் கடந்த 27.12.2016 அன்று வழக்கின் வாதி மற்றம் எதிரிக்கு சாதி சான்றிதழ் வழங்கிய வேலூர் வட்டாட்சியர் மற்றும் தலைமையிடத்து வட்டாட்சியர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் கடந்த 18.03.2017 அன்று இவ்வழக்கின் விசாரணையை முடித்து அரசு சிறப்பு வழக்கறிஞரின் கருத்துரை பெற்று எதிரிகள் மீது சட்டப் பிரிவு 294 (b), 323, 326, 341 of I.P.C. r/w. 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va), 3 (1) (a) SC/ST Act ன்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. இதற்கிடையில் 1ம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிராக குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டதாக 23.01.2025 அன்று பதிவு செய்யப்பட்டது.

22. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் படி கேள்விகள் கேட்க 2, 3 மற்றும் 4 எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினர். இருதரப்பு வாய்மொழி வாதங்கள் கேட்கப்பட்டது. 1ம் எதிரி வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது.

23. தற்போது இந்த வழக்கில் முக்கியமாக தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

24. ***தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இந்த வழக்கின் 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட மேற்படி குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?***

25. அரசு தரப்பு வழக்குப்படி கடந்த 15.11.2016ம் தேதி முதல் சம்பவமாக 2ம் எதிரி மைக்கேசன் நிலத்தில் புகார்தாரரான பூபாலனுக்கு சொந்தமான மாடு மேய்ந்துகொண்டிருப்பதாக மைக்கேசன் வந்து அ.த.சா.4 பரிமளாவிடம் சொன்னதைத் தொடர்ந்து மாலை சுமார் 6.00 மணிக்கு அ.த.சா.4 பரிமளா மகாதேவன் என்பவரின் நிலத்தின் வழியாக

நடந்து சென்று கொண்டிருந்தபோது 1ம் எதிரியான ராஜேஷ் அவரது சாதியைக் காரணமாக கொண்டு அவரை வழி மடக்கி ஏய் செக்கிலி தெவிடியா உங்க மாடு எங்க நிலத்துல மேயுது நீ அங்க எவனடி ஓக்கர என்று அசிங்கமாக அருவருப்பு உண்டாக்கும் விதத்தில் திட்டினார் என்றும் அதற்கு மாடுதானே தெரியாமல் மேய்ந்து விட்டது, அதற்கு ஏன் சாதியை சொல்லி திட்டுகிறார் என்று சொன்னபோது அதைப் பார்த்து அங்கு வந்த 3 மற்றும் 4ம் எதிரிகள் கையால் உடம்பில் மாறி மாறி அடித்துவிட்டார்கள் என்றும் அந்த தகவலை அ.த.சா.1க்கு போன் மூலம் சொன்னதாகவும் அதன் பிறகு 2வது சம்பவமாக இரவு சுமார் 8.45 மணியளவில் அ.த.சா.1 மற்றும் அ.த.சா.4 ஆகிய இருவரும் அவர்கள் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது அவர்களைப் பார்த்த 1ம் எதிரி ராஜேஷ் ஏய் செக்கிலி நாய்களே ஏய் பொறம்போக்குல வீடு கட்டினு வாழ தெரியுது மாட்டை பிடிச்சு வைக்க தெரியலயா என்று மீண்டும் அசிங்கமாக திட்டியதாகவும், அதற்கு அ.த.சா.1 உன் மாடு தாண்டா மேய்ந்தது என்று சொல்ல இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் ராஜேஷ் அ.த.சா.1 ஐ பார்த்து ஏய் செக்கிலி பையா உன் மாடு தாண்டா மேய்ந்தது என்று சொல்லி தரையில் இருந்த மரக் கொம்பை எடுத்து அ.த.சா.1ன் தலை, இடது கை சுண்டு விரல், வலது முழங்கை கட்டை விரல், இடது கால் ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்தார் என்றும் அங்கு வந்த மைக்கேசனும் சேர்ந்து பெறம்போக்கில் வீடு கட்டி பொறம்போக்கு பொழப்பு பன்ற தெவிடியா பையா உன் ஜாதிகாரன் எல்லாம் அங்க இருக்க  ஒரு செக்கிலி மட்டும் இங்க வந்துட்டியா என அசிங்கமாக திட்டினார் என்றும் அதன் பிறகு 3வது சம்பவமாக மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இரவு 9.00 மணியளவில் ராஜேஷ்

வந்து அவர்களை வழிமடக்கி அ.த.சா.1 ஐயும் அவரது மகன் அ.த.சா.5 ஐயும் மரக் கொம்பால் மாறி மாறி அடித்துவிட்டு மரக் கொம்பை வீசி எறிந்துவிட்டு சென்றுவிட்டான் என்றும் அதன் பிறகு மருத்துவமனையில் சேர்ந்து 3 பேரும் சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் அ.த.சா.1 ன் வாக்குமூலத்தை பதிவு செய்து அதன் அடிப்படையில் வழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாகவும் அரசு தரப்பின் வழக்கு ஆகும்.

26. இந்த வழக்கைப் பொறுத்தவரை மொத்தம் 3 சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் சம்பவம் கடந்த 15.11.2016 ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் மகாதேவன் என்பவருடைய நிலத்தின் வழியே சென்றபோது அ.த.சா.4 ஐ 1ம் எதிரி ராஜேஷ் சாதி பெயரை சொல்லி வழி மடக்கி அசிங்கமாகவும் அருவருப்பாகவும் பேசியதாகவும் 3 மற்றும் 4 எதிரிகள் கைகளால் அ.த.சா.4 வை தாக்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிறகு 2வது சம்பவம் அ.த.சா.1 மற்றும் அவர்கள் வீட்டில் இருந்தபோது அன்றைய தினம் இரவு 8.45 மணிக்கு 1ம் எதிரி சாதி பெயரை சொல்லி திட்டியதோடு மரக் கொம்பை எடுத்து அ.த.சா.1 ன் தலை, இடது கை சுண்டுவிரல், வலது முழங்கை கட்டை விரல், இடது கால் ஆகிய இடங்களில் அடித்ததாகவும் அங்கு வந்த 2ம் எதிரி சாதி பெயரை சொல்லி அருவருக்கத்தக்க வார்த்தைகளையும் சொல்லி திட்டியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 3வதாக அன்று இரவு 9.00 மணியளவில் அ.த.சா.1, 4 மற்றும் 5 ஆகியோர் மருத்துவமனைக்கு செல்லும்போது அவர்களை வழி மடக்கி ராஜேஷ் அ.த.சா.4 மற்றும் 5 ஐ மரக்கொம்பால் மாறி மாறி அடித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

27. மேற்படி சம்பவம் குறித்து புகார்தாரர் மற்றும் காயமடைந்த நபரான பூபாலன் அ.த.சா.1 ஆகவும் அவரது மனைவி பரிமளா அ.த.சா.4 ஆக்வும் அவர்களின் மகன் ஓவின் குமார் அ.த.சா.5 ஆகவும் மகள்கள் சங்கமித்திரா மற்றும் காயத்திரி ஆகியோர் முறையே அ.த.சா.6 மற்றும் 7 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் 1 ம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து அவர் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டதால் அவருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அற்றுபோய் விட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2, 3 மற்றும் 4ம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை உற்று நோக்க வேண்டியுள்ளது.

<u>28. அரசு தரப்பின் வாதம்:-</u>

இந்த வழக்கில் அரசு தரப்பில் ஆஜரான அரசு சிறப்பு வழக்குரைஞர் இவ்வழக்கில் காயம்பட்ட அ.த.சா.1, 4 மற்றும் 5 ஆகியோர் சம்பவம் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் எதிரிகளின் செயல்கள் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அ.த.சா.1, 4 மற்றும் 5 ன் காயச்சான்றிதழ்கள் முறையே அ.த.சா.ஆ.6, 7 மற்றும் ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சம்பவம் குறித்து அ.த.சா.1, 4 மற்றும் 5 தவிர அ.த.சா.6 மற்றும் 7 ஆகியோரும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அ.த.சா.10 மற்றும் அ.த.சா.11 ஆகியோர் அ.த.சா.1, 4 மற்றும் 5 க்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் மேலும் காயம்பட்ட நபர்கள் இந்து அருந்ததியினர் வகுப்பைச்

சேர்ந்தவர்கள் என்பதை அ.த.சா.ஆ.9, 10 மற்றும் 11 மூலமும் அ.த.சா.12 சாட்சியத்தின் மூலமும் எதிரிகள் இந்து வன்னியர் இனத்தை சேர்ந்தவர்கள் என்பதை அ.த.சா.ஆ.12, 13, 14 மற்றும் 15 மூலமும் அ.த.சா.13 சாட்சியத்தின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை முறையாக நடத்தப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக அ.த.சா.15 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அதனால் 2, 3 மற்றும் 4 எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**29. எதிரிகள் தரப்பு வாதம்**:–

எதிரிகள் தரப்பு வாதம் இவ்வழக்கின் எதிரிகளுக்கும் அ.த.சா.1 குடும்பத்தினருக்கும் ஏற்கனவே முன் பகை உள்ளது என்றும் 2ம் எதிரியின் மற்றொரு மகனான ராஜா கிருஷ்ணன் என்பவர் மீது அ.த.சா.4 இதே போன்ற புகார் கொடுத்ததாக அ.த.சா.2 தன்னுடைய குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் இது போன்ற புகார் கொடுத்து வழக்கு நடத்தி நஷ்ட ஈடு பெறுவதை வாடிக்கையாக கொண்டுள்ளார்கள் என்றும், வழக்கில் சொல்லப்பட்டுள்ள 3 சம்பவங்களுக்கும் நேரிடையான சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கடந்த 15.11.2016 அன்று மாலை சுமார் 6.00 மணிக்கு நடந்த சம்பவம் குறித்து புகார்தாரரான அ.த.சா.1 க்கு அ.த.சா.4 கைபேசியில் சொன்னதை வைத்துதான் புகார் கொடுத்த அ.த.சா.1 சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேலும் இவ்வழக்கில் அ.த.சா.1 ன் மனவியான அ.த.சா.4 மகனான அ.த.சா.5 மகள்களான அ.த.சா.6 மற்றும் 7 ஆகியோர் மட்டுமே சாட்சியம்

அளித்துள்ளார்கள் என்றும் மற்றவர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும் அ.த.சா.1, 4, 5, 6 மற்றும் 7 ஆகியோரின் சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளன என்றும் அந்த முரண்பாடுகளை குறுக்கு விசாரணையின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும் சாட்சிகள் சொன்ன காயங்களுக்கும் மருத்துவ சான்றிதழ்களில் குறிபிடப்பட்டுள்ளவைகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன என்றும் அ.த.சா.1 க்கு சுண்டு விரலில் ஏற்பட்டதாக கூறப்படும் காயம் குறித்து அவர் மருத்துவமனையில் சேரும்போது எந்த குறியீடும் இல்லை என்றும் வாதிட்டார். மேலும் அ.த.சா.1, 4 மற்றும் 5ன் சாட்சியங்களில் முதல் விசாரணையிலேயே முரண்பாடுகள் உள்ளன என்றும் அந்த முரண்பாடுகள் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் அரசு தரப்பு வழக்குப்படி முதல் சம்பவம் மாலை சுமார் 6.00 மணிக்கு நடக்கும்போது 2ம் எதிரி சம்பவ இடத்தில் இல்லை மற்றும் அ.த.சா.1 சம்பவ இடத்தில் இல்லை என்றும், 2வது சம்பவத்தின்போது 2ம் எதிரி அருவருக்கத்தக்க வார்த்தைகளைப் பேசினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும், 3வது சம்பவத்தின்போது 2, 3 மற்றும் 4 எதிரிகள் ஈடுபட்டதாக வழக்கு இல்லை என்றும் மேற்படி 3 சம்பவங்களைப் பொறுத்து 1ம் எதிரிக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைப் பொறுத்து குற்றச்சாட்டுகள் அற்றுபோய் விட்ட நிலையில் 2 முதல் 4 எதிரிகள் அ.த.சா.4 ஐ முதல் சம்பவத்தின்போது தாக்கியதாகவும் 2ம் சம்பவத்தின்போது 2ம் எதிரி அருவருக்கத்தக்க வார்த்தைகளையும் சாதியின் பெயரையும் சொல்லி திட்டியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர மற்ற குற்றச்சாட்டுகள் 1ம் எதிரிக்கு எதிராகவே உள்ளது என்றும்

எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் சம்பவம் குறித்து ஒன்றுக்கொன்று முரண்பட்ட சாட்சியங்களாக அமைந்துள்ளதால் பல சந்தேகங்கள் எழுகின்றது என்றும் அந்த சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**<u>30. தீர்விற்கான காரணங்கள்:–</u>**

**<u>30.1. முதல் சம்பவம் குறித்து</u>**

*30.1.1.* அரசு தரப்பின் வழக்குப்படி கடந்த 15.11.2016 அன்று மாலை சுமார் 6.00 மணிக்கு நிலத்தில் மாடு மேய்ந்தது சம்பந்தமாக 1ம் எதிரி சாதி பெயரைச் சொல்லி அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதாக அ.த.சா.4 சாட்சியம் அளித்துள்ளார். மேற்சொன்ன முதல் சம்பவம் மகாதேவன் நிலத்தில் அ.த.சா.4 சென்றபோது நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 3 சம்பவங்கள் எந்தெந்த இடங்களில் நடந்தது என்பதை அ.த.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பின் வழக்குப்படி கடந்த 15.11.2016 அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் அ.த.சா.1 க்கு அவரது மனைவி அ.த.சா.4 கைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு அவரது மாடு மைக்கேசன் நிலத்தில் மேய்ந்துவிட்டதாகவும் மைக்கேசன் வந்து அந்த தகவலை சொன்னதாகவும் அ.த.சா.4 நிலத்திற்கு செல்வதற்காக மகாதேவன் நிலத்தில் வழியே நடந்து சென்றபோது 1ம் எதிரி ராஜேஷ் அங்கு வந்து வழி மடக்கி ஆபாசமான அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசியதாகவும் அப்போது அங்கு வந்த 3, 4 எதிரிகள் அ.த.சா.4 ஐ கையால் அடித்ததாகவும் கைபேசியில் தெரிவித்ததாக அ.த.சா.1 புகாரிலும்

வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளார். அந்த சம்பவத்தைப் பார்த்ததாக யாரும் சொல்லவில்லை. அந்த சம்பவம் நடந்தபோது அ.த.சா.1 சம்பவ இடத்தில் இல்லை என்பதும் அவர் அவரது பிள்ளைகளை டியூஷனுக்கு அழைத்து சென்றிருந்தார் என்பதால் அ.த.சா.5, 6 மற்றும் 7 அந்த சம்பவ இடத்தில் இல்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

*30.1.2.* முதல் சம்பவத்தில் 3, 4 எதிரிகள் அ.த.சா.4 ஐ கையால் அடித்தார்கள் என்ற குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்கவேண்டியுள்ளது. அ.த.சா.4 தன்னுடைய சாட்சியத்தில் முதல் விசாரணையில் "மேற்படி தஞ்சியம்மாள் மற்றும் சிவசங்கரி ஆகியோரும் என்னை கன்னத்தில் மற்றும் முதுகில் அடித்தார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார். அதைக் கேள்விபட்ட அ.த.சா.1 தனது சாட்சியத்தில் ராஜேஷின் அம்மா மற்றும் ராஜேஷின் அக்காவோ அல்லது தங்கையோ சேர்ந்து அவரை அடித்தார்கள் என்று அவரின் மனைவி அவருக்கு கைபேசி மூலம் தகவல் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.5 தன்னுடைய சாட்சியத்தில் தஞ்சியம்மாள் மற்றும் சிவசங்கரி ஆகியோர் என் அம்மாவை முதுகில் அடித்ததாக சொன்னார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.1, 4 ஐ எந்த பகுதியில் தாக்கினார்கள் என்று சொல்லவில்லை. அ.த.சா.4 முதுகிலும் கன்னத்திலும் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.5 முதுகின் மீது அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.6 தன்னுடைய சாட்சியத்தில் தஞ்சியம்மாள், சிவசங்கரி ஆகியோர் அங்கு வந்து கைகளால் உடம்பின் மீது மாறி மாறி அடித்தார்கள் என்று கேள்விப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.7 தன்னுடைய

சாட்சியத்தில் என் அம்மாவை கைகளால் மாறி மாறி தஞ்சியம்மாள் மற்றும் அவரது மகள் சிவசங்கரி ஆகிய 2 பேரும் அடித்தனர் என்று கைபேசி மூலம் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்.

*30.1.3.* அ.த.சா.4 க்கு சிகிச்சையளித்த அ.த.சா.10 என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் அ.த.சா.4 ஐ மருத்துவமனையில் சேர்த்தபோது அவர் 2 ஆண் நபர் மற்றும் 2 பெண் நபர் 15.11.2016 தேதியன்று இரவு 8.30 மணியளவில் நெ.171. என்.எஸ்.கே நகர், கணியம்பாடி இல்லத்தில் கட்டையால் தாக்கியதாக கூறினார் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவருக்கு 3x2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் இடது முழங்கையில் காணப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவருக்கு முதுகிலோஇ கன்னத்திலோ எந்த காயமும் இருந்ததாக குறிப்பிடவில்லை. அவ்வாறே அ.த.சா.ஆ.7 மருத்துவ சான்றிதழிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவிர அவருக்கு வேறு எந்த காயமும் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். 3, 4 எதிரிகள் அவரை முதுகின் மீதும் கன்னத்தின் மீதும் அடித்ததாக சாட்சியம் அளித்திருந்தபோதிலும் அ.த.சா.4 க்கு முதுகு மற்றும் கன்னத்தின் மீதோ அல்லது உடலின் மற்ற பகுதியின் மீதோ வலி இருப்பதாக கூட மருத்துவரிடம் தெரிவிக்கவில்லை. மேலும் மாலை 6.00 மணிக்கு மகாதேவன் நிலத்தின் வழியாக செல்லும்போது அவரை தாக்கியதாக வாக்குமூலம் கொடுத்துவிட்டு அவ்வாறே முதல் விசாரணையில் சொல்லிவிட்டு மருத்துவரிடம் காயம்பட்ட சில மணிநேரங்களில் சென்று சிகிச்சைக்கு சேரும்போது குறிப்பாக கதவு எண் 171, என்.எஸ்.கே. நகர், கணியம்பாடி இல்லத்தில் கட்டையால் 2 பெண் நபர் மற்றும் 2 ஆண்

நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டு சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார்.

*30.1.4.* அ.த.சா.4 க்கு ஏற்பட்டதாக அ.த.சா.ஆ.7 ல் குறிப்பிடப்பட்டுள்ள காயத்திற்கும் அ.த.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் தாக்கியதாக கூறும் விபரங்களுக்கும் பொருந்திவரவில்லை. அ.த.சா.ஆ.7 ல் குறிப்பிட்டுள்ள 3x2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் முழங்கையில் உள்ளதாக குறிப்பிட்டிருந்தபோதிலும் அவ்வாறு முழங்கையின் மீது தாக்கியதாக அவர் சாட்சியம் அளிக்கவில்லை. ஆக 15.11.2016 மாலை 6.00 மணிக்கு மகாதேவன் நிலத்தில் நடந்ததாக கூறப்படும் சம்பவம் குறித்து அ.த.சா.4 தவிர வேறு யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. அந்த சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியம் யாரும் இல்லை. அந்த சம்பவம் குறித்து அ.த.சா.1, 5, 6 மற்றும் 7 ஆகியோரின் சாட்சியங்கள் அ.த.சா.4 ன் சாட்சியத்திற்கு மாறுபட்டுள்ளது. மேலும் அவரை 3 மற்றும் 4 எதிரிகள் தாக்கியதால் காயங்கள் ஏற்பட்டதாக அ.த.சா.10 இடம் சிகிச்சைக்கு சேரும்போது குறிப்பிட்டு சொல்லவில்லை. அவர் சொன்ன விதத்தில் முதுகிலோ கன்னத்திலோ வலி இருப்பதாகக் கூட தெரிவிக்கவில்லை. ஆக அ.த.சா.4 க்கு மகாதேவன் நிலத்திற்கு வழியாக செல்லும்போது 3 மற்றும் 4 எதிரிகள் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக கூறும் கூற்றை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. மேலும் இவ்வழக்கின் 3 மற்றும் 4 எதிரிகள் பொது இடத்தில் வேறு நபர்கள் முன்னிலையில் அ.த.சா.4 ஐ சாதியின் பெயரை குறிப்பிட்டு சொல்லி இழிவுபடுத்தியதாகவோ அவர்கள் இந்து அருந்ததியினர் இனத்தை சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் அவர்களை தாக்கியதாக யாரும் சாட்சியம் அளிக்கவில்லை.

**<u>30.2. 2ம் சம்பவம் குறித்து</u>**

*30.2.1.* அரசு தரப்பின் வழக்குப்படி 2வது சம்பவம் கடந்த 15.11.2016 இரவு 8.45 மணிக்கு அ.த.சா.1, 4 மற்றும் 5 ன் வீட்டருகில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்குப்படி அன்று இரவு 8.45 மணியளவில் அ.த.சா.1 மற்றும் 4 வீட்டில் இருக்கும்போது 1ம் எதிரி ராஜேஷ் அவர்கள் வீட்டருகில் வந்து அவர்களைப் பார்த்து ஏய் செக்கிலி நாய்களே ஏய் பொறம்போக்குல வீடு கட்டினு வாழ தெரியுது மாட்டை பிடிச்சு வைக்க தெரியலயா என்று மீண்டும் அசிங்கமும் அருவருப்பு உண்டாகும் விதத்தில் மாட்டை சாக்கு வைத்து சாதியைப் பற்றி திட்டியதாகவும் அதற்கு பிறகு அ.த.சா.1 உன் மாடுதாண்டா மேய்ந்தது என்று சொல்ல வாக்குவாதம் ஏற்பட்டபோது ராஜேஷ் ஏய் செக்கிலி பையா உன் மாடுதாண்டா மேய்ந்தது என்று சொல்லி தரையில் இருந்த மரக் கொம்பை எடுத்து அவரின் தலை, இடது கை சுண்டுவிரல், வலது முழங்கை, கட்டை விரல், இடது கால் ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்ததாகவும் அப்போது அங்கு வந்த 2ம் எதிரி மைக்கேசன் பொறம்போக்கில் வீடு கட்டி பொறம்போக்கு பொழப்பு பன்ற தெவிடியா பையா உன் ஜாதிகாரன் எல்லாம் அங்க இருக்கா ஒரு செக்கிலி மட்டும் இங்க வந்துட்டியா என அசிங்கமாக திட்டியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*30.2.2.* இந்த வழக்கில் 1ம் எதிரியான ராஜேஷ் இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய் விட்டது. 2வது சம்பவத்தைப் பொருத்தவரை அரசு தரப்பு வழக்குப்படி 2ம் எதிரி மைக்கேசன் அருவருக்கத்தக்க வார்த்தைகளாலும் சாதி பெயரை

சொல்லி அவமரியாதையாக பேசியதாகவும் தான் குறிபிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன 2 வது சம்பவம் சம்பந்தமாக அ.த.சா.1 ன் சாட்சியத்தை உற்று நோக்கும்போது அ.த.சா.1 க்கும் 1 ம் எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் 1 ம் எதிரி தரையில் இருந்த கொம்பை எடுத்து அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அந்த இடத்திற்கு 2 ம் எதிரி வந்ததாகவோ பேசியதாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அவருடன் இருந்ததாக கூறும் அ.த.சா.4 சாட்சியத்திலும் அன்று இரவு 8.30 மணிக்கு நடந்த சம்பவத்தின்போது 2 ம் எதிரியான மைக்கேசன் வந்ததாகவோ அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசியதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அ.த.சா.5 இரண்டாவதாக சம்பவத்தைப் பார்த்ததாக சாட்சியம் அளித்த நிலையில் ராஜேஷ் என்பவர் கட்டை எடுத்து தகாத வார்த்தைகளால் அருவருக்கத்தக்க வகையில் திட்டினார் என்றும் சாதி பெயரை சொல்லி திட்டினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவரும் 2 ம் எதிரி அந்த இடத்திற்கு வந்ததாகவோ திட்டியதாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அதே போல் அ.த.சா.6 மற்றும் 7 ஆகிய இருவரும் 2 வது சம்பவம் நடந்தபோது மைக்கேசன் வந்ததாகவும் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசியதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் 2 வது சம்பவம் நடந்த இடம் அ.த.சா.ஆ.19 மாதிரி வரைபடத்தின்படி பூபாலன் வீட்டிற்கு எதிரில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது பொது இடம் இல்லை, அது பொது இடத்திற்கு அருகில் உள்ளதாகவும் குறிப்பிடப்படவில்லை. ஆக பொது இடத்தில் வைத்து அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசியதாகவோ சாதி பெயரை சொல்லி மற்றவர்கள் முன்னிலையில் இழிவாக சொல்லி இழிவுபடுத்தியதாக எவரும் சாட்சியம்

அளிக்கவில்லை. ஆக இந்த வழக்கில் 1ம் எதிரிக்கு எதிராக சொல்லப்பட்ட குற்றச்சாட்டு அற்றுபோய்விட்ட நிலையிலும் 2ம் எதிரி அந்த இடத்திற்கு வந்ததாகவோ அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசியதாகவோ சாதி பெயரை சொல்லி இழிவுபடுத்தியதாகவோ அ.த.சா.1 சாட்சியம் அளிக்காத நிலையிலும் அ.த.சா.4, அ.த.சா.5, அ.த.சா.6 மற்றும் அ.த.சா.7 ஆகியோர் அ.த.சா.1ன் சாட்சியத்திற்கு ஒத்திசைவு சாட்சியம் அளிக்காத நிலையிலும் 2ம் எதிரிக்கு எதிராக 2வது சம்பவம் குறித்து சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. மேலும் எதிரிகள் தரப்பில் வாதிட்டது போல் மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களில் முதல் விசாரணையில் முரண்பாடுகள் இருப்பதோடு குறுக்கு விசாரணையின்போது முரண்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி முரண்பாடுகள் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் அமைந்துள்ளது. அதனால் 2வது சம்பவம் குறித்து 2ம் எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டைப் பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>30.3. 3வது சம்பவம் குறித்து</u>**

*30.3.1.* இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்குப்படி 15.11.2016 இரவு 9 மணியளவில் அ.த.சா.1, 4 மற்றும் 5 ஆகிய 3 பேரும் மருத்துவமனைக்கு சென்றுகொண்டிருக்கும்போது 1ம் எதிரி ராஜேஷ் மீண்டும் அங்கு வந்து வழிமறித்து 3 பேரையும் மரக்கொம்பால் மாறி மாறி அடித்துவிட்டு கொம்பை வீசி எறிந்துவிட்டு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 3வது சம்பவம் குறித்து குற்றச்சாட்டு 1ம் எதிரிக்கு எதிராக

மட்டுமே கூறப்பட்டுள்ளது. 1ம் எதிரி இறந்துவிட்ட நிலையில் அவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது. இருந்தபோதிலும் அந்த சம்பவம் குறித்து அரசு தரப்பின் சாட்சியங்களை உற்று நோக்கும்போது அ.த.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் நான் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ராஜேஷ் என்பவர் அவரையும் அவரது மனைவியையும் 2 பெண்களையும் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.2 தன்னுடைய சாட்சியத்தில் மருத்துவமனைக்கு செல்லலாம் என்று இருந்தபோது மைக்கேசன் மற்றும் ராஜேஷ் என்பவர்கள் வழி மடக்கி அவரது தாலி கயிற்றை பிடித்து எறிந்துவிட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆக அ.த.சா.2 அவரது சாட்சியத்தில் 1ம் எதிரி அவரது காணவரையோ அவரது மகனையோ அடித்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.த.சா.6 தன்னுடைய சாட்சியத்தில் மருத்துவமனைக்கு போகும் வழியில் மறுபடியும் வழிமறித்து தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். யாரை தாக்கினார்கள் என்று குறிப்பாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.த.சா.6 மற்றும் 7 ஆகியோர் அவர்களது சாட்சியத்தில் அவர்களது அப்பா, அம்மா மற்றும் தம்பியை ராஜேஷ் வழிமடக்கி கொம்பால் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.த.சா.1, 4, 5, 6 மற்றும் 7 ஆகியோர் அவர்களது முதல் விசாரணையிலேயே ஒருவருக்கொருவர் முரண்பட்ட விதத்தில் சாட்சியம் அளித்துள்ளார்கள். 3 வது சம்பவம் நடந்த இடத்திலிருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை.

*30.3.2.* இந்த வழக்கில் ஒரு மரக் கொம்பை அ.த.சா.1ன் வீட்டிற்கு அருகில் இருந்த கைப்பற்றப்பட்டதாக குறிப்பிட்டு அது சா.பொ.ஆ.1 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது கைப்பற்றியதாக தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் சாட்சியம் அளித்து அ.த.சா.8 மற்றும் 9 முதல் விசாரணையில் காவல் நிலையத்தில் வைத்து வெற்றுத்தாளில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆக இந்த வழக்கில் 3 வதாக நடந்த சம்பவம் குறித்து சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கவேண்டும் என்பது நியதி.

*30.3.3.* ஆக இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள 3 சம்பவங்களும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

**31. புலன் விசாரணை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல்**

இந்த வழக்கு சம்பவம் கடந்த 15.11.2016 அன்று நடந்ததாக குறிப்பிட்டு கடந்த 16.11.2016 அன்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 16.11.2016 அன்றே மாவட்ட கண்காணிப்பாளர் திரு.பகலவன் I.P.S. அவர்கள் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஆரோக்கியம் என்பவரை SC/ST விதிகள் 1995 விதி 7 (1) படிக்கு புலன் விசாரணை அதிகாரியாக நியமித்துள்ளார். அ.த.சா.15 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி மேற்படி விதி 7 (1) படிக்கு 30 நாட்களுக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும். இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகளை 16.11.2016 லேயே விசாரித்துவிட்டு மருத்துவர்களை 20.12.2016 தேதியிலும் வட்டாட்சியர்களை 27.12.2016 லும் முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் 16.11.2016 தேதியில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ஆனால் அந்த வழக்கின் இறுதி அறிக்கையை 19.12.2018 அன்று ஏறத்தாழ 2 ஆண்டுகள் கழித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு 2 ஆண்டுகள் கழித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததற்கு எவ்வித காரணமும் முன்வைக்கவில்லை. சிறப்பு அரசு தரப்பு வழக்குரைஞரிடம் 18.03.2017 அன்று கருத்துரை பெற்றுள்ளார். ஆனால் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய காலம் கடத்தியதற்கான காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனவே அவர் மேற்சொன்ன விதி 7 ஐ பின்பற்றவில்லை என்பது தெளிவாகிறது. மேற்படி புலன் விசாரணை அதிகாரியான அ.த.சா.15 எந்த சாதியை சேர்ந்தவர் என்பது குறிப்பிட்டு சொல்லவில்லை. அவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் இல்லாதபட்சத்தில் விதி 7 ஐ மீறியது குற்றமாகும். மேலும் அவர் செய்த புலன் விசாரணைகளையும் அற்றுபோனதாக கருதவேண்டும். இது சம்பந்தமாக மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் The Hon’ble High Court in the recent judgment of A.Nandhagopalan Vs Selvam @ Selvaganapathi என்ற வழக்கில் 27.02.2024 தேதியில் கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

*“held that Rule 7 of Scheduled Caste / Scheduled Tribe Rules is mandatory and many judgments of the Hon’ble High Court and Hon’ble Supreme Court has been referred and finally held that non compliance of Rule 7 (1) of Scheduled Caste / Scheduled Tribe rules as it is mandatory and not directory, the entire investigation shall stand vitiated”*

எனவே புலன் விசாரணை அதிகாரி விதி 7 ஐ பின்பற்றாமல் இருப்பதும் இவ்வழக்கிற்கு குந்தகமாக அமைந்துள்ளது. அதன்

அடிப்படையிலும் அரசு தரப்பு வழக்கு வலுவிழந்து காணப்படுகிறது. அந்த புலன் விசாரணை அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் இனி வரும் காலங்களில் இதுபோன்ற காலதாமதங்கள் ஏற்படுவதை தடுக்கவும் அரசு தரப்பின் வழக்கை நீர்த்துபோகும் வகையில் கால தாமதம் ஏற்படுத்துவதை தடுக்கவும் இந்த தீர்ப்பின் நகல் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோர் மேற்சொன்ன விதிகளின்படி மேற்பார்வை அதிகாரிகளாக இருப்பதால் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. மேலும் மேற்படி விதிகளில் சொல்லப்பட்டுள்ள மாநில விழிப்பு துறைக்கும் விழிப்பு அதிகாரிக்கும் இத்தீர்ப்பின் நகல் அனுப்பிவைக்க உத்தரவிடப்படுகிறது.

**32. தீர்வு**

முடிவில் இந்த வழக்கின் 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்ற காரணத்தினால் 2 முதல் 4 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235 (1) படிக்கும் பிரிவு 258 B.N.S.S. படிக்கும் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்தும் அவர்களை மேற்படி குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1ம் எதிரி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டதால் அவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டு அற்றுபோய் விட்டதாக ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. 3 மற்றும் 4 எதிரிகள் Crl.M.P.No.1716/2019 கடந்த 02.04.2019 தேதியிட்டு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி கு.வி.மு.ச. பிரிவு 88 படிக்கு பிணைப் பத்திரங்கள் எழுதி கொடுக்க உத்தரவிட்டதன் பேரில் பிணைப் பத்திரங்கள் எழுதிக் கொடுத்துள்ளார்கள். 1 மற்றும் 2ம் எதிரிகள் கைது செய்யப்பட்டு

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் 2 முதல் 4 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை ரத்து செய்யவும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் வழக்கு சொத்து ஆவணமான சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட மரக்கொம்பை இவ்வழக்கில் மேல் முறையீட்டு காலம் முடிந்த பிறகு கு.வி.மு.ச. பிரிவு 262 ன் படி அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G RADHAKRISHNAN

Digitally signed by G RADHAKRISHNAN
Date: 2025.07.10 19:38:25 +0530

**அமர்வு நீதிபதி,**
**சிறப்பு நீதிமன்றம், தாழ்த்தப்பட்டோர்**
**மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமை**
**தடுப்பு சட்டம், வேலூர்.**

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:–

| | |
|---|---|
| அ.த.சா.1 | கா.பூபாலன் (புகார்தாரர்) |
| அ.த.சா.2 | நா.முருகன் |
| அ.த.சா.3 | சு.கோவிந்தராஜ் |
| அ.த.சா.4 | பூ.பரிமளா |
| அ.த.சா.5 | பூ.ஓவின் குமார் |

| | |
|---|---|
| அ.த.சா.6 | பூ.சங்கமித்திரா |
| அ.த.சா.7 | பூ.காயத்திரி |
| அ.த.சா.8 | கா.ராமஜெயம் |
| அ.த.சா.9 | மு.ரவிகுமார் |
| அ.த.சா.10 | மருத்துவர் எழிலரசி |
| அ.த.சா.11 | மருத்துவர் ராஜீ |
| அ.த.சா.12 | மு.பழனி (வட்டாட்சியர்) |
| அ.த.சா.13 | மு.மோகன் (துணை வட்டாட்சியர்) |
| அ.த.சா.14 | சி.முரளிதரன் (உதவி ஆய்வாளர்) |
| அ.த.சா.15 | சு.ஆரோக்கியம் (காவல் துணை கண்காணிப்பாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**:–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் (அ.த.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகசரில் உள்ள அ.சா.8 ன் முதல் கையொப்பம் (அ.த.சா.8 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.8 ன் முதல் கையொப்பம் (அ.த.சா.8 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.4 | பார்வை மகசரில் உள்ள அ.சா.9 ன் இரண்டாவது கையொப்பம் (அ.த.சா.9 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.9 ன் இரண்டாவது கையொப்பம் (அ.த.சா.9 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.6 | அ.த.சா.1 புகார்தாரர் பூபாலன் என்பவரின் விபத்து பதிவேடு மற்றும் அதனுடன் இணைந்த நுண்கதிர் அறிக்கை மற்றும் மருத்துவர் அறிக்கை (அ.த.சா.10 |

| | |
|---|---|
| | மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.7 | அ.த.சா.4 பரிமளா என்பவரின் விபத்து பதிவேடு மற்றும் அதனுடன் இணைந்த நுண்கதிர் அறிக்கை மற்றும் மருத்துவர் அறிக்கை (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.8 | அ.த.சா.5 ஓவின் குமார் என்பவரின் காய சான்று (அ.த.சா.11 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.9 | அ.சா.1 பூபாலன் என்பவரின் சாதி சான்றிதழ் (அ.த.சா.12 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.10 | அ.சா.4 பரிமளா என்பவரின் சாதி சான்றிதழ் (அ.த.சா.12 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.11 | அ.சா.5 ஓவின் குமார் என்பவரின் சாதி சான்றிதழ் (அ.த.சா.12 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.12 | 1ம் எதிரி ராஜேஷ் என்பவரின் சாதி சான்றிதழ் (அ.த.சா.13 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.13 | 2ம் எதிரி மைக்கேசன் என்பவரின் சாதி சான்றிதழ் (அ.த.சா.13 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.14 | 3ம் எதிரி தஞ்சியம்மாள் என்பவரின் சாதி சான்றிதழ் (அ.த.சா.13 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.15 | 4ம் எதிரி சிவசங்கரி என்பவரின் சாதி சான்றிதழ் (அ.த.சா.13 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.16 | முதல் தகவல் அறிக்கை (அ.த.சா.14 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.17 | அ.த.சா.15 க்கு வேலூர் மாவட்ட கண்காணிப்பாளர் வழங்கிய செயல் முறை ஆணை (அ.த.சா.15 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.18 | பார்வை மகசர் (அ.த.சா.15 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.19 | மாதிரி வரைபடம் (அ.த.சா.15 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.20 | கைப்பற்றுதல் மகசர் (அ.த.சா.15 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:–** இல்லை.

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>:–**

| | |
|---|---|
| சா.பொ.1 | கொம்பு (சுமார் 3 அடி 5 செ.மீ. நீளம் மற்றும் சுமார் 3 செ.மீ. விட்டம் கொண்டது) (அ.த.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |

G RADHAKRISHNAN Digitally signed by G RADHAKRISHNAN Date: 2025.07.10 19:38:43 +0530

**அமர்வு நீதிபதி,**
**சிறப்பு நீதிமன்றம், தாழ்த்தப்பட்டோர்**
**மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமை**
**தடுப்பு சட்டம், வேலூர்.**

Copy to: (As per Rules 108 and 115 of Cr.R.P. – 2019)

1. The Registrar General, High Court of Madras, Chennai – 104.
2. The Principal District Judge, Vellore District.
3. The District Collector, Vellore.
4. The Superintendent of Police, Vellore.
5. The Inspector of Police, Vellore Taluk Police Station, Vellore.
   Through Special Public Prosecutor,
   Special Court for SC/ST (PoA) Act , Vellore.
6. The State Level Vigilance and Monitoring Committee constituted under Rule 16 of SC/ST Rules 1995 represented by, the Chairman – Chief Minister
   St. George Fort, Chennai.
7. Spare Copies.